பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 23 திங்கட்கிழமை 07.03.2022 கதிர் 122

**இது ரகசியம் அல்ல!**

ஜனவரி 2015 இல் பதவி இழந்து முடங்கிக்கிடந்த மஹிந்த ராஜபக்ஷ தரப்பை – அதன் செல்வாக்கை – தென்னிலங்கை மக்கள் மத்தியில் மீளத் தூக்கி நிறுத்திய தரப்பினரில் மிக முக்கியமானவர் விமல் வீரவன்ஸ.

☞2

ஐக்கிய மக்கள் சக்தி – தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில்

# அரசுக்கு எதிராக ஹற்றனில் நேற்று மாபெரும் போராட்டம்

கூட்டமைப்பு எம்.பிக்களும் பங்கேற்பு





ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக் குக் கூட்டணி ஏற்பாடு செய்த அரசுக்கு எதிரான மாபெரும் கவனயீர்ப் புப் போராட்டம் நேற்று ஹற்றன் நகரில் நடை பெற்றது.

☞8

## மக்கள் ஆணை ஊடாகவே ஆட்சியைக் கவிழ்ப்போம்!



சஜித் திட்டவட்டம்

குப்பி விளக்கின் வெளிச்சத்திலேயே ஜனாதிபதியின் சுபீட்சத்தின் தொலை நோக்கு விஞ்ஞாபனத்தை வாசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் வாக்குகளின் ஊடாக மாத்திரமே ஆட்சியைக் கவிழ்ப்போம்.

☞8

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி

## ஹற்றனிலும் கையெழுத்து வேட்டை; அணிதிரண்டனர் பெருமளவு மக்கள்!





பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக ஒழிக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை ஹற்றனிலும் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஏற்பாடு செய்த விலைவாசி உயர்வுக்கு எதிரான மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் ஹற்றன்

☞2




## சாபக்கேடான சட்டம் நாட்டுக்கு வேண்டாம்

உதயகுமார் வலியுறுத்து

இந்த நாட்டுக்குச் சாபக்கேடாக அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

☞2

விடுதலைப் போராட்டத்துக்கு

## மலையக மக்களும் பெரும் பங்களிப்பு!

சாணக்கியன் எடுத்துரைப்பு

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு மலையக மக்களும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். இதனால் பயங்கரவாதத்

☞2

## வடக்கு, கிழக்கு, மலையகம் இணைந்து பயணிப்பது காலத்தின் கட்டாய தேவை

இராதா முழக்கம்



வடக்கு, கிழக்கு, மலையகம் இணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

☞2

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைத் தூக்கிக் கடாசி இருக்கின்றது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.

ஆளும் கூட்டமைப்பின் அமைச்சரவையில் இருந்து வெளியே வந்துள்ள விமல் வீரவன்ஸவினால் இனி அதிகாரத்துக்கு வரக்கூடிய ஒரு வேறு தரப்பை கட்டியெழுப்புவதோ அல்லது தாம் சேரக்கூடிய அணியை அதிகாரத்துக்கு கொண்டு வருவதோ சாத்தியமில்லை என்பது எவ்வளவு தூரம் உண்மையோ, அந்த அளவுக்கு ராஜபக்ஷவின் அரசியல் அதிகாரத்துக்கு ஆப்படிப்பதில் விமல் வீரவன்ஸவினால் காத்திரமாகப் பங்களிக்க முடியும் என்பதும் உண்மையாகும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அந்த வேலைத் திட்டத்தை விமல் அணி வகுத்துக் கொண்டிருக்கின்றது. எவ்வளவு குறுகிய காலத்தில் வேகமாக மொட்டுத் தரப்பு அதிகாரத்துக்கு வந்ததோ, அதே வேகத்தில் அது அடிபட்டு, இன்றைய ஐ.தே.கட்சி நிலைமைக்குச் செல்லும் என்று தென்னிலங்கைத் தரப்புகள் கூறுகின்றன.

இந்தியாவோடு அணி சேரும் ராஜபக்ஷ அரசின் கொள்கைப் போக்குக் குறித்து சினம் அடைந்துள்ள ஒரு பெரிய நாடு, விமல் வீரவன்ஸ தரப்பைத் தூண்டி பின்னணியிலிருந்து இயக்குவதாக ராஜபக்ஷக்கள் கருதுகின்றனர்.

அந்தப் பின்புலத்தில், ராஜபக்ஷக்களுக்கு எதிரான விமல் வீரவன்ஸ தரப்பின் அரசியல் தாக்குதல் இனி மூர்க்கமாக இருக்கும் என்றும் –

அதை எதிர்த்து 'கவுண்டர்' பண்ணக்கூடிய சிங்களப் பேச்சாளர்கள் ராஜபக்ஷக்கள் தரப்பில் இல்லை என்றும் – சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போதைய அரசின் முரட்டுத்தனமான கொள்கைகள், பொருளாதார அணுகுமுறைகளை இனி மேடைக்கு மேடை விமல் வீரவன்ஸ் வாங்கு வாங்குவார் என்று தென்னிலங்கை மூத்த ஊடகவியலாளர் ஒருவர் கூறினார்.

"இன்னும் ஓரிரண்டு வருடங்களுக்கு தேசிய மட்டத் தேர்தல் ஏதும் நடக்காது. மீண்டும் தேசிய மட்டத் தேர்தல் ஒன்று அழைக்கப்படும்போது நாட்டின் நிலைமை இப்போது உள்ளதை விட மிக மிக மோசமாக இருக்கும். மொட்டுக் கட்சி காணாமல் போகும் சூழல் உருவாகி இருக்கும். ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., சு.க. ஆகியவற்றுக்கு பின்னால்தான் ஐ.தே.கட்சியுடன் மொட்டு கட்சி போட்டி போடும் நிலைமை வரும். அந்த நிலைமையை மொட்டுக் கட்சிக்கு வாங்கிக் கொடுத்த பெருமை கோட்டா – பஸில் கொம்பனியைச் சேருவதாக இருக்கும். இழந்த வாக்கு வங்கியை மீளச் சுவீகரிப்பதற்காக கடைசி நேரத்தில் மீண்டும் பௌத்த – சிங்கள பெருந்தேசியவாதத்தை (பேரினவாதத்தை) ராஜபக்ஷக்கள் கையில் எடுப்பார்கள். ஆனால், நாட்டின் மிக மோசமான பிற பிரச்சினைகளுக்கு மத்தியில் அது இன்னொரு தடவை தெற்கில் எடுபடப் போவதில்லை. இந்த ஆட்சி பீடம் தொலைந்தால் போதும் என்ற மன ஓட்டத்தை மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றப் பண்ணுவதில் விமல் வீரவன்ஸ – உதய கம்மன்பில குறுப்பின் சுறுசுறுப்பான செயற்பாடு கணிசமான அளவு பங்காற்றும்" – என்றும் அந்த ஊடகவியலாளர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், ஆளும் கூட்டமைப்புக்குள் மேலும் ஏற்படக்கூடிய வெடிப்புகளைத் தவிர்க்கும் Damage Control நடவடிக்கையில் ராஜபக்ஷக்கள் ஈடுபட்டுள்ளார்கள் எனத் தெரிகிறது. அதிருப்தியின் உச்சத்தில் இருக்கும் சுதந்திரக்கட்சித் தரப்பை பேச்சு அழைத்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. இந்தப் பேச்சு பெரும்பாலும் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு, மோசமான பணவீக்கம், விலைவாசி உயர்வு ஆகியவற்றினால் மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் சீற்றத்தைப் பயன்படுத்தி அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சி ஒன்றை வரும் 15ஆம் திகதி கொழும்பில் நடத்திக் காட்டுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருவதாகத் தெரிகிறது. கொழும்பில் எங்கு, எப்போது, எந்த வடிவத்தில் இந்த மக்கள் எழுச்சி நிகழ்வு முன்னெடுக்கப்படும் என்பது தெரியவில்லை. எனினும் இந்த எழுச் சிக்கு வெளியிடங்களில் இருந்து மக்களைத் திரட்டி வருவதற்கு வாகனங்கள் இருக்குமா, அவற்றுக்கும் எரிபொருள் கிடைக்குமா என்பதும் சந்தேகத்துக்குரியது தான். எப்படியும் மக்களைத் திரட்டிக் காட்டுவதில் எதிரணி துடிப்பாக இருப்பதாகத் தெரிகின்றது. இன்னும் எட்டு நாள்கள் இருப்பதால் அதற்குள் எதுவும் நடக்கலாம். பார்ப்போம்.

- மின்னல் -

## ஹற்றனிலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நடைபெற்றது. இந்தப் போராட்டத்தின் நிறைவில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு கோரி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி. இராதாகிருஷ்ணன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மூவின மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுதத்தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர்.

## சாபக்கேடான சட்டம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தொழிலாளர் தேசிய முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா நகரில் நேற்று கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் வடக்கு, கிழக்கு மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது மலையக இளைஞர்களுக்கு எதிராகவும் அந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது.

வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டவர்கள்கூட இன்னும் வழக்குத் தொடுக்கப்படாமல் பல வருடங்களாகியும் சிறைகளில் வாடுகின்றனர்.

வேலை தேடி கொழும்புக்குச் சென்ற மலையக இளைஞர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மக்களுடன் நட்பைப் பேணியவர்களுக்கு எதிராகவும் அந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது.

இதனால் பலரின் வாழ்க்கை சூனியமாகியுள்ளது. எனவே, இப்படியான – சாபக்கேடான சட்டம் நாட்டுக்குத் தேவையில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபைகூட இதனையே வலியுறுத்தியுள்ளது. எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

## வடக்கு, கிழக்கு, .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்காக மலையக மக்கள் முன்னணி எந்தப் போராட்டத்தையும் வடக்கு, கிழக்கு கட்சிகளுடன் இணைந்து நடத்தத் தயாராக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை வலுவிழக்கச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கு, கிழக்கு கட்சிகளால் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் கையெழுத்து வேட்டை நேற்று நுவரெலியாவில் நடைபெற்றது.

நுவரெலியா பிரதான நகரில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுசாமி இராதாகிருஷ்ணன், மயில்வாகனம் உதயகுமார் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்த கருத்துத் தெரிவித்த இராதாகிருஷ்ணன் எம்.பி.,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பது தமிழர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு சட்டமாகவே இந்த நாட்டில் பலரும் கருதுகின்றார்கள். ஆனால், அந்தச் சட்டமானது தமிழர்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டில் வாழ்கின்ற அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தகின்ற ஒரு சட்டமாகும்.

இந்தச் சட்டத்தின் மூலமாக எந்தவொரு நபரையும் கைதுசெய்கின்ற அதிகாரம் பொலிஸாரிடம் இருக்கின்றது. எனவே, அனைத்து மக்களும் இணைந்து இந்தச் சட்டத்துக்கு எதிராகப் போராட வேண்டும்.

இந்தச் சட்டத்தின் மூலமாக அதிக பாதிப்பைச் சந்தித்த மலையகக் கட்சி என்றால் அது மலையக மக்கள் முன்னணி என்பதை அனைவரும் அறிவார்கள். எங்களுடைய கட்சியின் தலைவர் இந்தச் சட்டத்தின் மூலமாகக் கைதுசெய்யப்பட்டார். அவர் துன்புறுத்தப்பட்டார். அதேபோல் எங்களுடைய கட்சியின் விசுவாசிகள் கைதுசெய்யப்பட்டு எந்தக் காரணமும் இல்லாமல் சந்தேகத்தின் பேரில் பல வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டனர்.

எனவே, போர் வடக்கு, கிழக்கிலே நடந்தாலும் மலையகப் பகுதியில் இருக்கின்ற இளைஞர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இந்தச் சட்டம் இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் நாங்கள் மலையகத்தில் மிகவும் அக்கறையாக இருக்கின்றோம்.

நான் கல்வி இராஜாங்க அமைச்சராக இருக்கின்றபோது வடக்கு, கிழக்கில் பல்வேறு அபிவிருத்திகளைப் பாடசாலைகளில் செய்திருக்கின்றேன். அதன்போது எனக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள்.

அதற்குக் காரணம், நாங்கள் இரண்டு சமூகமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அப்படிச் செயற்பட்டால் மாத்திரமே வடக்கு, கிழக்கு மக்களும் மலையக மக்களும் எங்களுடைய உரிமைகளையும் அபிவிருத்தியையும் பூர்த்திசெய்து கொள்ள முடியும். அதனைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் நன்குணர்ந்து செயற்படுகின்றது. இந்த நிலைமை தொடர வேண்டும் – என்றார்.

## மலையக மக்களும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புச் சட்டத்தால் அவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா நகரில் நேற்று கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட வேண்டிய காலம் வந்துள்ளது. அந்தவகையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராகத் தற்போது ஓரணியில் திரண்டுள்ளோம். மக்களும் ஒன்றுபட்டுள்ளனர். எனவே, சிறந்த எதிர்காலத்துக்கான ஆரம்பப்புள்ளியாகக்கூட இது அமையலாம்.

தற்போது பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, தமது அரசியல் எதிராளிகளை ஒடுக்குவதற்காகவே இந்தச் சட்டத்தை ஆளுந்தரப்பு பயன்படுத்தி வருகின்றது. இதனால்தான் அனைத்து இன மக்களையும் இந்தப் பயணத்தில் இணைத்துள்ளோம்.

அதேவேளை, மலையக மக்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படும் என அரசு கூறியது. ஆனால், அது உரிய வகையில் நடக்கவில்லை. அதற்கு எதிராக மக்கள் போராடினால், அவர்களுக்கு எதிராகவும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்படலாம்; கைது செய்யப்படலாம்.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மலையக மக்களே திகழ்கின்றனர். அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கின்றனர்.

எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு அமைச்சுப் பதவி கிடைத்துள்ளது. வாழ்த்துத் தெரிவித்துபதாதைகாட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கைத்தொழில் அமைச்சரான அவர், மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# சபரிமலை
# ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்
## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட்,
கிளிநொச்சி.

No. 315, Kandy Road,
Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சமயோசித நிபந்தனை இது!

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறும் இலங்கைக்கு அதிலிருந்து மீளுவதற்கான அவசர உதவிகளை இந்தியா வழங்க முன் வந்துள்ளது என்று செய்திகள் முதலில் வெளியாகின.

அதன் முதல் கட்டமாக ஐம்பது கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாவை) உடனடியாக விரைந்து இந்தியா வழங்கியுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டது.

நேர்மையீனமான கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கு இப்படி ஓர் உதவியை – அவசரத்தின் நிமித்தம் தன்னும் – கண்மூடித்தனமாக வழங்குவது சரியானதா என்ற கேள்வி இந்திய ஆர்வலர்கள் தரப்பில் எழுப்பப்படாமல் இல்லை.

அடுத்த கட்டமாக உணவு, எரிபொருள், மருந்து போன்ற மிக அவசரமாகத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களின் கொள்வனவுக்காக நூறு கோடி அமெரிக்க டொலர் (சுமார் இருபத்தியையாயிரம் கோடி ரூபா) கடனை இந்தியா வழங்கி உதவும் என்றும் –

அது எந்த நேரத்திலும் கொழும்புக்குக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் –

கூடச் செய்திகள் வெளியாகின.

ஆனால், சரியான சமயத்தில், சரியான முறையில் புதுடில்லி நிர்வாகம், இலங்கை விவகாரத்தில் சுதாரித்துக் கொண்டு விட்டதாக – விழித்துக் கொண்டு விட்டதாக – தெரிகின்றது.

கண்மூடித்தனமாக – ஆற்றில் அள்ளிக் கொட்டுவது போல – நிதியை, கடனை வாரி இறைக்க முடியாது, அதற்கு சில நியாயமான நிபந்தனைகள் இருக்கின்றன என்று இந்தியா கொழும்புக்கு உணர்த்தியிருப்பதாக இப்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஒன்று – இலங்கை தன்னுடைய தற்போதைய பொருளாதார நெருக்கடியை நீண்ட கால அணுகுமுறையில் எப்படித் தீர்த்துக் கொள்ளப் போகின்றது? அது தொடர்பான இலங்கையின் உத்தேச வழி வரைபடம் யாது?

அடுத்தது – இலங்கையின் வடக்கு, கிழக்கு சம்பந்தமான பொருளாதார, தந்திரோபாய நடவடிக்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்கான கொழும்பின் உத்தேசம் – ஏற்பாடு – யாது?

– இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் தெளிவான, வெளிப்படையான, நியாயமான, காரிய சாத்தியமான தெளிவுபடுத்தல்களும் உறுதிப்பாடுகளும் கொழும்பிடம் இருந்து கிடைத்த பின்னரே இந்தியாவின் அடுத்த கட்ட கடன் உதவித் திட்டம் விடுவிக்கப்படும் என இந்தியத் தரப்பு நிபந்தனை விதித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

சரியான சமய, சந்தர்ப்பம் பார்த்து, தந்திரோபாயமாக இராஜதந்திர காய் நகர்த்தலை முன்னெடுக்கின்றது இந்தியா.

கழுத்தை நெரிக்கும் நிதிப் பிரச்சினையில் சிக்கி இருக்கும் கொழும்பை வெறுமனே அந்த இறுக்கத்திலிருந்து விடுவிக்காமல், பேரினவாதக் கெடுபிடிப் போக்கிலிருந்தும் விடுவிக்கும் சாணக்கியமே இது.

இலங்கைத் தமிழர்களின் நீதி, நியாயமான, சட்டபூர்வமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் விதத்தில் உச்சபட்ச அதிகாரப் பகிர்வை தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு வழங்குவது இலங்கையின் ஐக்கியத்துக்கும், இறைமையின் உறுதிப்பாட்டுக்கும் நன்மையாக அமையும் என்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் ஏனைய உயர்மட்டங்களிலும் இந்தியா கோடி காட்டி வரும் கொள்கைத் திட்டத்தின் விளக்கம்தான் இப்போது கட்டவிழ்கின்றது.

இந்தியா இப்போது விதித்துள்ள நிபந்தனைகளுக்கு நீதி, நியாயமான முறையில் பிரதிபலிப்பைக் காட்டி, உண்மையாகச் செயற்பட கொழும்பு முன்வருமானால், 'இலங்கைக்கு நன்மையாக அமையும்' என்று இந்தியா கூறி வந்த கருத்தின் அர்த்தம் கொழும்புக்குப் புரியத் தொடங்கும்.

# போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோரை ஒடுக்க வேண்டும்!

## மஹிந்த ராஜபக்ஷ சூளுரை

எதிர்கால தலைமுறையை அழிக்கும் வகையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோரை ஒடுக்க வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாரம்மல் பிரதேச சபையின் புதிய கட்டடத்தை கடந்த சனிக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நாரம்மல பிரதேச சபையின் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கக் கிடைத்தமை தொடர்பாக மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

பணியாற்றுவதற்குச் சிறந்த சூழல் காணப்பட வேண்டும் என்று நான் எப்போதும் நம்புகிறேன். மழை பெய்யும் போது நனையும் இடத்தில் பழைய கட்டடங்களில் அலுவலக செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது.

எனவே ஒவ்வொரு பிரதேச சபைக்கும் புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி மக்களைச் சிறந்த சூழலில் பணிபுரியச் செய்யவேண்டும்.

ஒரு பக்கம் போர் தொடுத்தாலும் மறுபுறம் அரசு கட்டடங்கள், வீதிகள் போன்றவற்றை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டோம். அதற்கு இன்று பலன் கிடைத்துள்ளது என நம்புகிறேன். குறிப்பாக நெடுஞ்சாலைகள் அமைக்கும் பணி தொடங்கிய போது, நெடுஞ்சாலைகள் தொடர்பாகப் பல விமர்சனங்கள் எழுந்தன.

பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. அன்று குற்றம் சாட்டியவர்கள் இன்று அந்த வீதிகளில் பயணிக்கும் போது குற்றஞ்சாட்டுவதை நாம் அறிவோம். அப்போது குருநாகலை அடைய எத்தனை மணி நேரம் ஆனது? இன்று எவ்வளவு நேரம் செலவாகும்? அன்று காலை வேளையில் வரும்போது மெதமுலனவிலிருந்து கொழும்புக்கு வரும் வழியில் இடைநடுவில் உணவு அருந்திவிட்டே பயணிப்போம்.

அப்போது பழுதடைந்த வீதிகளே இருந்தன. ஆனால் ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலங்களில் கொழும்பு வந்து சேருகிறோம்.

இவ்வாறாக நாம் நாட்டின் அபிவிருத்தியை ஆரம்பித்தோம். போர் இடம்பெறும் போதே நாம் இதனைச் செய்தோம். நாம் எந்தவொரு அபிவிருத்தியையும் இடைநிறுத்தாமலேயே 30 ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டு வரத் தீர்மானித்தோம்.

மக்களுக்கு வேண்டிய அனைத்தையும் பெற்றுக்கொடுத்து வேலை செய்வதுடனேயே நாம் போரையும் முடிவுக்குக் கொண்டு வந்தோம். அதனால் தான் இன்று சுதந்திரமாக வந்து சுதந்திரமாகப் பேசி சுதந்திரமாக நடமாட முடிகிறது.

இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கருத்துக்களைத் தெளிவாகக் கூறி தனது நாட்டை ஒரு திசையில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாம் அனைவரும் பிரதமராக, அமைச்சர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக மற்றும் அரச ஊழியர்களாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

டிஜிற்றல் மயமாக்கல் போன்ற புதிய



முறைகளில் நாம் முன்னேறி வருகிறோம். நாம் எமது நாட்டையும் எமது பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். நெடுஞ்சாலைகள் மற்றும் நீர் மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் முறையாக மேம்படுத்தப்பட வேண்டும்.

சுமார் 98 சதவீத மின்சாரம் வழங்கப்படும் போது, அதே முறையில் நுகர்வோருக்கு தண்ணீரை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் அரசாங்கம் தற்போது அந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றது. அதன்படி, நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சுத்தமான குடிதண்ணீரை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

எனவே, இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் மக்களுக்கு சேவை செய்வதற்கும் நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். நமது வருங்கால சந்ததியினரைப் பாதுகாக்க நாமும் உழைக்க வேண்டும்.

இன்று போதைப்பொருள் பிரச்சினை தலைதூக்கியுள்ளது. நமது பிள்ளைகளைப் பாதுகாக்க போதைபொருள் வர்த்தகத்துக்கு எதிராகச் செயற்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாவிடின், நம் தேசத்தை அழிப்பதற்காக அவ்வாறான செயற்பாட்டை முன்னெடுப்போரை நாம் அடக்காவிட்டால், நம் பிள்ளைகள் பெரும் சிக்கலுக்கு ஆளாக நேரிடும்.

எனவே போதைப்பொருளில் இருந்து மக்களைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம். மேலும் நமது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தமது பிள்ளைகள் தொடர்பில் சில பெற்றோர் அவர்களது சிறு வயதில் அதிக கவனம் செலுத்துகின்ற போதிலும், அவர்கள் உயர் வகுப்புக்குச் செல்லும் போது அவர்கள் மீதான கவனம் குறைந்துவிடுகிறது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அவர்களது போக்கில் விட்டுவிட்டு தமது வேலையைத் தொடர்கிறார்கள்.

பிள்ளைகளைச் சிறு வயதைவிட அவர்கள் பெரியவர்களாக வளரும் போதே அவர்கள் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே அவர்கள் இளைஞர்களாக வளர்ந்து நிற்கும் போது அவர்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது பெற்றோரதும், பெரியோரதும் கடமையாகும். அவ்வாறு செய்யாவிடின் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

எனவே நாம் எமது பிள்ளைகளைப் பாதுகாத்து தேசத்தை கட்டியெழுப்பி இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

# மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர்ச்சியாக டீசலுக்கு தட்டுப்பாட்டு நிலை!

மன்னார், மார்ச். 07

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிபொருள் நிலையங்களில் டீசல் இன்மையால் தனியார் பஸ் உரிமையாளர்கள், டிப்பர் சாரதிகள் உட்பட பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கையிருப்பு மிகவும் குறைவான நிலையில் காணப்படுவதுடன் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லாமல் காணப்படுகிறது.

இதன்காரணமாக டிப்பர் வாகனங்கள் மற்றும் மீன் ஏற்றுமதி வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட நேரம் வரிசையில் காணப்படுகின்றன.

டீசல் இன்மையால் தூர இடங்களுக்கு செல்லும் தனியார் பஸ்கள், சாரதிகள் பாரிய சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம் பல இடங்களில் டீசல் பதுக்கல் இடம்பெறுவதுடன் தொடர்ச்சியாக டீசல் பற்றாக்குறை நிலவும் என்பதால் வாகன உரிமையாளர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெரல், கான்களுடனும் டீசலுக்காகக் காத்திருக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பாரம்பரியமாக கடற்றொழில், விவசாயம் மேற்கொள்ளும் காணிகளில் நடவடிக்கையை எவரும் தடுக்க முடியாது

## யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

பாரம்பரியமாகக் கடற்றொழில் மற்றும் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட காணிகளில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்வதை யாரும் தடைசெய்ய முடியாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதேநேரம் வன ஜீவராசிகள் அல்லது வனப் பாதுகாப்பு திணைக்களங்களால் அவசியம் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்கள் தொடர்பில் பாரம்பரிய விவசாய நிலங்களும் மீன்பிடி நிலைகளும் காணப்படுமாயின் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அனுமதியைப் பெற்று தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வனப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள், மக்களின் விவசாய நிலங்களை விடுவிப்பது தொடர்பாகத் துறைசார் அமைச்சர் சி.பி.ரத்நாயக்கா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு –

மேற்படி பகுதிகளில் கடற்றொழில் நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்ள முடியாமற்போகும் நிலை காணப்பட்டால் அது தொடர்பில் அனுமதிகள் மற்றும் சட்டரீதியான தேவைப்பாடுகளை மேற்படி பிரதேச செயலரூடாக மேற்கொண்டு தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

அதேநேரம் இத்தகைய பகுதிகளில் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செல்லும் போது வீதிகள் தொடர்பான அசௌகரியங்கள் இருக்குமானாலும் அவற்றையும் இனங்கண்டு பிரதேச செயலர் தமக்குத் தகவல்களை வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முன்பதாக வனப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களின் இலக்குகளையும் மக்களின் வாழ்வியல் எதிர்பார்ப்புக்களையும் ஒன்றிணைக்கும் வகையில் சம்பந்தப்பட்ட அமைச்சால் நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்படவுள்ள 'வனக் கிராம்' எனும் திட்டத்தை மருதங்கேணி, மணற்காடு பிரதேசத்தில் இருந்து ஆரம்பிக்க முடியும் என்று அமைச்சர் சி.பி.ரத்னாயக்கா தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தக் கிராமத்துக்கான உட்



கட்டமைப்பு வசதிகளையும் அத்தியாவசியமற்றும் அடிப்படைத் தேவைகளையும் உருவாக்குவதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது மாவட்ட அரச அதிபர்கள், துறைசார் அதிகாரிகள் பிரதேச செயலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்க ஐ.நாவினால் மாத்திரமே முடியும்!

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

ஒருங்கிணைப்புக் குழு சார்பாக பிரதமர் எல்லா மாவட்டங்களுக்கும் ஒவ்வொருவரை நியமிக்க வேண்டும். பிரதமரது நடவடிக்கை எல்லா மாவட்டங்களிலும் நடைபெற வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உலக நாடுகளில் ஐ.நா. ஒன்றால் தான் எங்களது இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் போது எல்லா இனங்களும் சமமாகக் கருத்தப்பட வேண்டும் என்ற ஐ.நாவின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும். தட்டிக் கழிக்க முடியாது.

இலங்கை அரசு தட்டிக் கழித்து வருவதால் தான் ஐ.நா. முக்கியமான தீர்மானத்தைச் சொல்லியிருக்கிறது. இலங்கை



அரசாங்கம் ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஐ.நா. முன் இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டிவரும்.

மேலும், யாழ்ப்பாணத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு சார்பாக பிரதமர் கண்காணிப்பை மேற்கொள்ள ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் எல்லா மாவட்டங்களிலும் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் செய்யப்படுகின்ற வேலைகள் ஒழுங்காக நடைபெறும். ஆகையால் பிரதமரது நடவடிக்கை எல்லா மாவட்டங்களிலும் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# மக்கள் மயப்படுத்தப்பட்ட வனவள கிராமமாக மணற்காடு பிரகடனம்!

இலங்கையின் முதலாவது மக்கள் மயப்பட்ட வன வள கிராமமாக மணற்காடு பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக வன ஜீவராசிகள் வன வளபாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

மணற்காடு சவுக்கு மரக்காட்டை மக்கள் பயன்பாட்டுக்குரிய மக்கள் மயப்படுத்தப்பட்ட சவுக்கு மரக்காடாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க வாக்குறுதி வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளில் மக்களின் வாழ்வாதார தேவைக்குரிய காணிகளை விடுவிப்பது தொடர்பாக யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களால் அமைக்கப்பட்ட மணற்காடு சவுக்கு மரக் காட்டை மக்கள் மயப்படுத்த வேண்டும் என்கிற மக்களின் கோரிக்கைக்கு இணங்க இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட வன வள கிராமமாக பிரகடனம் செய்வதனூடாக, அங்குள்ள சவுக்கு மரக்காட்டை மக்கள் பராமரிக்கமுடிவதுடன், வாழ்வாதார செயற்பாடுகளையும் மேற்கொள்ள கூடியதாக அமையும்.

அதேவேளை, மணல் அகழ்வு இடம்பெறாத வகையில் மக்கள் இந்தக் காட்டை பராமரிக்க வேண்டியதும் பாதுகாக்க வேண்டியதும் அவசியம் எனத் தெரிவித்த அவர், இத்த விடயத்தில் அமைச்சின் ஒத்துழைப்பு இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

# சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களை பிரித்தானியா தடைசெய்ய வேண்டும்!

## அந்நாட்டு எம்.பி. கோரிக்கை

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளைத் தடைசெய்வதற்கு பிரித்தானிய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் விரேந்திர சர்மா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மற்றும் தற்போது இலங்கையில் தொடரும் சித்திரவதைகளுக்கும் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவே காரணம் என்றும் அவர் கூறினார்.

சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர் மீது கடந்த வருடம் அமெரிக்கா பயணத்தடை விதித்தது போன்று பிரித்தானியாவும் தங்கள் மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகார சபையின் கீழ் தடை செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

மேலும் இந்த நடவடிக்கை பொறுப்புக்கூறல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கையாகவும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்கான பிரித்தானிய அரசாங்கத்தின் கடப்பாட்டை உறுதிப்படுத்துவதாகவும் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

சவேந்திர சில்வா தொடர்பான யுத்தக் குற்ற ஆதாரங்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு தடை விதிப்பது தொடர்பாகப் பிரித்தானியா தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் வெதுப்பகங்கள் மூடப்படும் நிலைமை?

யாழ்.மாவட்டத்தில் வெதுப்பகங்களை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில் –

வடக்கிற்கான பிறீமா மா விநியோகஸ்தருடன் சனிக்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில் யாழில் வெதுப்பக உற்பத்தி விநியோகத்துக்கான மாவின் அளவைக் குறைப்பதாகத் தெரிவித்திருந்தார்கள்.

இதன்போது, நாம் எமக்கு வழங்கப்படும் மாவின் அளவைக் குறைக்க வேண்டாம் எனக் கோரியிருந்தோம். ஆனாலும் அவர்கள் எதிர்வரும் நாள்களில் யாழ். மாவட்டத்துக்கு வழங்கப்படுகின்ற மாவின் அளவை உடனடியாகக் குறைக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் உற்பத்தி அளவைக் குறைக்கவுள்ளோம்.

யாழ்.மாவட்ட செயலாளர் மற்றும் கூட்டுறவு ஆணையாளரின் வழிகாட்டுதலின்படி நாம் செயற்படுகிறோம். அவர்களுடன் கலந்துரையாடி எமக்கு வழங்கப்படும் மாவின் அளவைத் தொடர்ந்து பெற்று தருமாறு கோரவுள்ளோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் மாவட்ட செயலருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருக்கின்றோம்.

அதன் பின்னரும் மா வழங்கப்படாவிட்டால் வெதுப்பகங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் அத்தோடு எரிபொருள் பிரச்சினையும் தற்போது காணப்படுகின்றது.

எனவே வெதுப்பகங்கள் தொடர்ச்சியாக இயங்குவதற்கு மாவட்ட செயலர் மற்றும் கூட்டுறவு ஆணையாளர் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யுத்த காலத்தில் கூட நாம் தொடர்ச்சியாகப் பொது மக்களுக்கான வெதுப்பக உற்பத்திப் பொருள்களை வழங்கி இருந்தோம். ஆனால் தற்போதுள்ள நிலையில் அவ்வாறு செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது. – எனத் தெரிவித்துள்ளனர்.

# மனித உரிமைகளைமீறும் இலங்கையருக்கு உலக நாடுகள் தடை விதித்தல் வேண்டும்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள்

மனித உரிமைகளை மீறி, செயற்படும் இலங்கையர்க்கு எதிராக உலக நாடுகள் தடைகளை விதிக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என அரசாங்கம் தெரிவிக்கின்ற நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை முரணாகக் காணப்படுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமக்கான நீதி, பொறுப்புக்கூறல் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலவீனமானவர்கள் ஐக்கிய நாடுகளையும் சர்வதேசத்தையுமே நம்பியுள்ளனர் எனவும், இலங்கையில் உண்மையான முன்னேற்றம் ஏற்பட, உலக நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என வும், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தி உள்ளார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 301

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**756. அதியுச்ச அதிகாரப் பகிர்வு ஒன்றை பரிசீலிக்க விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றார்கள் என்ற தகவலை ஜனாதிபதி பிரேமதாஸாவுக்குத் தெரிவிக்கும்படி விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனே, தன்னிடம் கேட்டுக் கொண்டாரென வடக்கு மாகாண அவைத்தலைவர் சிவஞானம் தற்பொழுது செய்திகள் பகிர்ந்துள்ளாரே?**

இது 1991ஆம் ஆண்டு காலம், பிரேமதாஸாவுக்கு எதிரான குற்றவியல் விசாரணைப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது, அவரது அந்த இடர்களையும் பாவித்து, மாகாண சபையை பரிசீலிக்க, தேர்தலில் பங்கு பற்ற, 'அதியுச்ச அதிகாரப் பகிர்வு' என்ற படிவத்தில் தரப்படுகிறது. 1990இல் இந்தியப் படைகள் வெளியேறிய பின் நடந்த பேச்சுக்களின் போது அரசமைப்பின் 6 ஆவது திருத்த சட்டம் (பிரிவினை கோருவதைத் தடுக்கும் சட்டம்) நீக்கப்பட்டு, வடக்கு - கிழக்கு மாகாண சபையும் கலைக்கப்பட வேண்டும் என்ற விடுதலை புலிகளின் நிபந்தனைகளுக்கு, அதற்கு அவர்கள் (புலிகள்) ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று பிரேமதாஸா கேட்டமையால், அந்தப் பேச்சு முன்னேறவில்லை. இடையில் மாகாண சபை கலைக்கப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் களைய ஒத்துக் கொள்ளவில்லை. பிரபாகரனை சந்தித்த சிவஞானம், செய்திகளில் பகிர்ந்துள்ள கருத்துக்களை நோக்கும் போது, மாகாண சபைகளை ஏற்று நடத்துவதில் உள்ள நன்மைகளையும் பிரபாகரனுக்கு எடுத்து சொல்லியிருப்பார் என்றும் எதிர்பார்க்கலாம்.

மாகாண சபை முறைமை எடுத்த எடுப்பிலேயே தமிழ் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாவிட்டாலும் அங்கிருந்து படிப்படியாக அதிகாரங்களை கையிலெடுத்து சுயாட்சிக்கு முன்னேறக் கூடிய வழி ஒன்றைத் தந்தது. அவற்றை உறுதிப்படுத்தி, நடைமுறைக்கு கொண்டுவர இந்திய படைகள் (அவர்களோடு போர் தொடுக்காதிருந்தால்) தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்திருப்பார்கள். அதை ஏற்று நடத்தி கொள்ள முடியாத தமிழ் மக்கள், தங்களுக்கு ஏற்படுத்தி கொண்டது பேரிடரே.

அதை விட்டு, விடுதலைப் புலிகள் எந்த காலத்திலும் மாகாண சபை முறையை பரிசீலிக்கவோ, ஏற்றுத் தேர்தல்களில் பங்கு பற்றவோ முற்படவில்லை என வரலாற்றை திரிவுபடுத்த முனைவதும், எது எப்படியானாலும் தங்களது வால்களை நிமிர்த்தி விட விடவே மாட்டோம் என அவர்களது ஆதரவாளர்களில் சிலர் அடம் பிடிப்பது ஏன் என்று புரியவில்லை.

சர்வதேசத்தின் தீர்மானங்களில் மாகாண சபை முறைகளில் அதிகாரப் பரவல் சேர்த்து கொள்ளப்படுவதால், இப்பொழுதும் அதனை பரிசீலிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ மறுத்து உதாசீனம் செய்வது புத்திசாலிதனமல்ல.

மிக அண்மையில் நாடு கடந்த தமிழீழ அரசின் அமைச்சர் ஒருவர், அதுவும் வெளியுறவு பகுதிகளை கையாண்டவர், மனித உரிமை மன்று சர்வதேச வாக்கெடுப்புக்கு பிரேரணை தருவதற்கு தமிழ் மக்கள் பெருமளவில் கையெழுத்திட்டுக் கோரிக்கை வைக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

சர்வதேச வாக்களிப்பை கோரக்கூடிய அப்படியான அதிகாரம் மனித உரிமை மன்றுக்கு அளிக்கப்படவில்லை என்பதை இவர் தெரிந்திருக்கவில்லை என்பதை இவர் வெளிக்காட்டுகின்றார்.

இவர்கள் இதேபோல், போரின் பின் தாங்களாவே ஒரு வாக்கெடுப்பை நடத்தினார்கள். அதற்கு நடந்ததென்ன?

மாகாண சபைகளை, புலிகள் ஏற்று நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு புலிகள் முன்னெடுப்புக்கள் செய்தார்கள்



என்பதை உறுதி செய்ய அவர்களின் உத்தியோக பூர்வ ஏடான 'புலிகளின்குரல்' என்பதிலிருந்த கொள்கை விளக்கங்களைத் தந்திருந்தேன். அது, அப்படியல்ல, அவர்களின் (புலிகளின்) தலைமையகத்தால் அப்படி ஏடு இருக்கவில்லை என விதண்டாவாதங்கள் மின்னஞ்சல்களினூடாக நடத்தப்பட்டன. இந்த குறிப்புகளே பதிந்த பின் சென்றவாரம் நண்பர் சுதந்தரமூர்த்தியின் 'Dare To Differ' என்ற நூலின் வெளியீட்டுக்கு சென்று நூலைப் பெற்று வாசித்த போது, மார்ச் 1990இல் பாலசிங்கம் மெல்போன் வந்தபோது தன்னிடமும் ஆஸ்திரேலிய விடுதலைப் புலிகளின் அமைப்பாளர் ஜெயகுமாரிடமும் உத்தியோக பூர்வமாக விடுதலை புலிகளின் குரல் Voice of Tigers என்ற ஏட்டைப் பதிப்பிக்க அறிவுறுத்தினார் எனவும், அதன் தலையாக்கங்களையும் கொள்கை விளக்கங்களையும் பாலசிங்கமே பொறுப்பெடுத்து மேற்பார்வை செய்தார் எனவும் குறித்துள்ளார். தான் பதித்த சில பதிப்புகளின் படங்களையும் அதனோடு இணைத்துள்ளார். ஆகவே 'அந்த நிலைப்பாடு அடேல் பாலசிங்கத்தின் அபிப்பிராயமல்ல.' விடுதலை புலிகளின் உத்தியோக பூர்வமான கொள்கை நிலைப்பாடு.

1990ஆம் ஆண்டு பேச்சுக்கள், 1991 இல் சிவஞானத்தின் மூலமான செய்தி - இவை எல்லாவற்றுக்கும் பிரேமதாஸா விட்டுக் கொடுக்காததால் அவர் 1 மே 1993இல் பலியானார். குலவீரசிங்கம் வீரகுமார், பாபு என பொதுவாக தெரியப்பட்ட 23 வயது இளைஞனே தற்கொலைக் குண்டுதாரியெனவும், அவன் இரண்டு வருடங்களுக்கு முன்னிருந்தே பிரேமதாஸாவின் சுசரித்த இல்லத்துக்கு முன்னால் வாடகைக்குக் கடை ஒன்று எடுத்து, அங்கு பணியாற்றிய பாதுகாப்பு படையினர் மற்றும் ஏனைய தொழிலாளர்களிடம் நெருங்கிப் பழகி, நட்பை வளர்த்தமையால் அன்று ஜனாதிபதி பிரேமதாஸவை நெருங்கி அதைச் செய்ய முடிந்தது என விசாரணைத் தகவல்கள் சொல்கின்றன. அவை ஆதாரங்களில் வெளிவந்தவை. சிவஞானம் ஊடான முயற்சிகளின் மறுமொழிகள் நம்பிக்கை தராதலால், இந்த திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கலாம்.

**757. இப்பொழுதும், இந்த வரலாறுகளின் பின்னாலும், சிங்கள பேரினவாதத்துடன் உள்ளக சுயநிர்ணயம் பற்றிபேசி, அது ஏற்றுக் கொள்ளப்படாத பட்சத்தில் வெளிப்புற சுயநிர்ணயத்துக்குப் போக வேண்டும் என்ற அபிப்பிராயங்களும் வெளிப்படுத்தபடுகின்றனவே?**

தாங்கள் விடுதலைப்புலிகளையும் அழித்து விட்டவர்கள் என துட்டகைமுனுவின் ருவான் வெலிசயா தாதுகோபுரத்தில் பதவிப் பிரமாணம் எடுப்பவர்கள் இருக்கும் முனைப்பில், அவர்களோடு சுயநிர்ணயம் அல்ல, நீதியான தீர்வு குறித்து பேச நினைப்பது இயலாவதன் பேச்சுக்காக சொல்வது போன்றதுதான்.

இந்த அரசு, சுயநிர்ணயம் என சர்வதேச சட்டத்திலிருந்ததையே நீக்கி, அதனை நாடாளுமன்றத்தில் அங்கீகரித்துள்ளது. ஜே.ஆர். 6ஆம் திருத்த சட்டத்தை நிறைவேற்றி, பிரிவினை பற்றி பேசுவதை சட்ட விரோதமாக்கியுள்ளார். இவர்களுக்கு மாற்றாக இருக்கும் எந்தச் சிங்கள பெரும்பான்மை கட்சியும் கூட, இந்தப் பேரினவாதத்தின் பின்னணியில் ஒரு தீர்வைத் தர முடியாது. ஆகவே தமிழ் சமுதாயம் ஒரு நியாயமான தீர்வை சர்வதேசத்திடம்தான் கேட்க வேண்டும். அவர்களது அரசியலின் போக்குகள் அவர்களை சர்வதேசத்தின் மனித உரிமை மன்றின் முன் இனப்படுகொலை என கோஷமிட்டு, அதன் அடிப்படையில் தீர்வு தரப்படவேண்டும் என்று வற்புறுத்த வைத்துள்ளது. ஆனால் இந்த பெயரை, 'லேபிளை' விட்டு போர்க் குற்றங்கள், மனித குலத்துக்குக் கெதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள், ஆக்கிரமிப்பு குற்றங்கள் நடந்தன என்று காணப்பட்டாலே, அதற்கான



பரிகாரத் தீர்வு இனப்படுகொலையின் அடிப்படையில் வருவதாகத்தான் இருக்கும் என்ற யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

அதே சமயம், யானை அசைந்து வருவது போல் இதற்கு எடுக்க கூடிய காலங்கள், மனித உரிமை மன்று இந்தக்



குற்றங்கள் நடந்தன என நிரூபிக்க எவ்வளவு காலம் எடுக்கும் என்பவை எல்லாம் கவனிக்கப்பட வேண்டும்.

மனித உரிமை மன்று தனது ஆராயவில் அறிக்கை தந்தாலும் ஸ்ரீலங்கா அதனை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்காது. அது ஐ.நா. பாதுகாப்பு சபைக்குப் பாரப்படுத்தி அங்கிருந்து தேவைப்படும் காலங்களையும் கணக்கிடவேண்டும்.

இந்திய அரசான பிராந்திய வல்லரசுக்கும், அது ஏற்படுத்திய மாகாண சபை முறைமையாவது, உடனடியாக அமுல்படுத்த அழுத்தம் தரவேண்டும் என சமர்ப்பணம் கொடுத்து இரண்டு பகுதியினரிடமிருந்தும் கையேந்தி நிற்கின்றார்கள் தமிழ் மக்கள்.

அதற்கான அழுத்தங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு, அதிகாரப் பரவலை உடனடியாகப் பெற்றுகொள்வது தங்களது இனத்தின் இருப்பைத் தக்க வைப்பதற்கு முக்கியம் என தமிழ் மக்கள் உணரவேண்டும். மார்ச் 2022 மனித உரிமை மன்றின் கூட்டம் முடிந்து விடும். அங்கத்துவ நாடுகளின் கருத்துக்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு மாறாக காட்டமாகவே உள்ளன. எனினும் அவர்கள் (இலங்கை) சென்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தை நிராகரித்துள்ளார்கள்.

இந்தக் கூட்டத்தில் 13ஆம் திருத்தத்தை முழுமையாகவும், மாகாண சபை தேர்தலையும் இந்தியா வற்புறுத்தியுள்ளது. அது மட்டுமல்ல, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் போது அது அர்த்தமுள்ள அதிகாரப் பரவலையும் வற்புறுத்தியுள்ளது. இது தமிழ் மக்கள் வழமையாக கோரும் Meaningful devolution என்ற சமஷ்டியைக் குறிக்கின்றதா என்பவையெல்லாவற்றையும் புரிந்து கொள்ள செப்ரெம்ர் 2022 அடுத்த அமர்வின் நடவடிக்கைகளை எதிர்பார்த்திருக்க வேண்டும். அதேசமயம் கோட்டாபய அரசு தாங்கள் தீர்மானித்துள்ளபடி, 'ஒரே நாடு; ஒரே சட்டம்' எனப் புதிய அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்தை நீக்கி நிறைவேற்றுவார்களா என்பதையும் பொறுத்துள்ளது. அதனைப் பொறுத்துத் தான் ஏதாவது எதிர் முனைப்புகள் ஏற்படலாம்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.நா. மனித உரிமை ஆணையர் அறிக்கை மிகவும் பாரதூரமானது!

## ஜி.எல்.பீரிஸ் அதிருப்தி



**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் ஆணையாளர் மிச்செல் பச்லெட் சமர்ப்பித்த அறிக்கையில் பாரதூரமான முரண்பாடுகள் இருக்கின்றன என இலங்கை தெரிவித்துள்ளது.**

**உயர்ஸ்தானிகர் சபையில் முன்வைத்த அறிக்கையில் பாரிய முரண்பாடுகளும் பலவீனங்களும் இருக்கின்றன என இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

மூன்று தொடர்ச்சியான தேர்தல்களில் இலங்கை நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் செயற்பாடுகளில் தலையிடுவதைப் போன்று இந்த அறிக்கை அமைந்துள்ளதாக அமைச்சர் பேரவையில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய உறுப்பு நாடுகளைப் பொறுத்தமட்டில் இதேபோன்ற விசாரணை நடைமுறையில் பாகுபாட்டைக் காட்டுவது, ஐக்கிய நாடுகள் அமைப்பின் அடித்தளத்தையே தாக்கும் செயலாகும்.

அத்துடன் இது நாடுகளின் இறையாண்மை சமத்துவம் தொடர்பான அத்தியாவசியக் கொள்கைகளை மீறுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பலம் மற்றும் கௌரவம் என்பன சர்வதேச சமூகம், தார்மீக மற்றும் நெறிமுறை என்பவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.

எனவே, இந்த நம்பிக்கையை குறையாமல் தக்கவைத்துக்கொள்வது இன்றியமையாதது என்று இலங்கை நம்புவதாகவும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் மேலோட்டமானமுடிவுகள், அறிக்கையில் இடம்பெற்றிருக்கின்றமை ஆழ்ந்த வருத்துக்கு உரியது என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை அரசாங்கம், மீட்டெடுத்த பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும், சமமான முறையில் நிலையான முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கும் உறுதியாக தீர்மானித்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# மொட்டுடனான உறவினை முறித்து வெளியேறுகின்றது சுதந்திரக்கட்சி?

எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள், பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு இடையில் சனிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய மேற்படி பிரேரணை தொடர்பான இறுதி தீர்மானம் நிறைவேற்றி மத்திய குழு கூட்டங்களில் அறிவிக்கப்படும் என சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி கோட்டாபயவின் இல்லத்தை முற்றுகையிட்டுப் பெண்கள் போராட்டம்!

மிரிஹானவில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்துக்கு முன்பாகப் பெண்கள் குழுவொன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தலைமையிலான சமகி வனிதா பலவேகயவால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு தொடர்பான கடிதம் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்ததன் பின்னர் மேற்படி குழுவினர் இந்தப் பட போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டு மக்கள் படும் இன்னல்களை வலியுறுத்தி பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கோட்டாபயவின் முடிவுக்கு எதிராக தயாசிறி ‘அட்வைஸ்’!



அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கக் கூடாது. முடிவு எடுக்கும்போது ஒரு கணமாவது சிந்திக்க வேண்டும் எனவும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சரவையிலிருந்து நீக்கிய விடயத்தில் இந்தத் தவறு இழைக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களுக்கான விசேட கூட்டம் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில்மேலும்தெரிவித்தவை வருமாறு –

அமைச்சர்களை மாற்றுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அவர் என்னையும் நீக்கலாம். அந்த அதிகாரத்தைச் சவாலுக்கு உட்படுத்தமுடியாது. எனினும், அமைச்சுப் பதவியிலிருந்து நபர்களை நீக்குவதால் நாட்டில் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோருக்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம்.

11 பங்காளிக் கட்சிகளும் தொடர்ந்து இணைந்து செயற்படும் எனவும் இதன் போது தெரிவித்துள்ளார்.

# அரசுக்கு எதிராக தீப்பந்தப் போராட்டம்

## தலவாக்கலையில் சனி இரவு நடந்தது




நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருளுக்குத் தட்டுப்பாடு காரணமாகவும் நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதை சுட்டிக் காட்டியும் உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரியும் தலவாக்கலையில் தீப்பந்த போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் தலவாக்கலை நகரில் சனி இரவு இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

மேலும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் மக்களின் வாழ்வாதாரம் படும் மோசம், உரம் இல்லாதால் தேயிலை பயிர்ச் செய்கை பாதிப்பு, மின்சாரம் கொடுக்க முடியாத அரசாங்கம் வீட்டுக்கு போ, எரிபொருள் தட்டுப்பாடு மக்கள் நீண்ட வரிசையில் என அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி, பதாதைகளை ஏந்திப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் அசோக சேபால உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

# இலங்கையிலிருந்து மிகநுட்பமாக தங்கம் கடத்திய பெண் கைது!

கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்த முயன்ற பெண் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை சுங்கத்துறையின் அதிகாரிகள், கொழும்பில் இருந்து வந்த குறித்த பயணியை இரகசியதகவலின் அடிப்படையில் தடுத்து நிறுத்தினர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட சோதனையில், காலணியின் அடியில் நுட்பமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 தங்கத் துண்டுகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர். 393 கிராம் தங்கம் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இதன் மதிப்பு 18.84 லட்சம் இந்திய ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட்டுக்கோட்டையில் விபத்து இருவர் படுகாயமடைந்தனர்

யாழ்.வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அத்தியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

கார் ஒன்றை முந்திச் சென்ற வேளை எதிரே வந்த பஸ்ஸுடன் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த அராலியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த பஸ்ஸின் சாரதி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அரசு முழுமையாக நீக்கவேண்டும்

## நுவரெலியாவில் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து




நுவரெலியா, மார்ச். 07

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என அனைத்து இன மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். ஆதரவு தெரிவித்து கையொப்பம் இடுகின்றனர். எனவே, இந்தச் சட்டத்தை அரசு முற்றாக நீக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா நகரில் நேற்று கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் எம்.பி. மேற் கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்ததாவது:–

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது 40 ஆண்டு காலமாகத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இடையிடையே சிங்கள இளைஞர்கள் தண்டிக்கப்பட்டனர். தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக மிக மோசமாக இந்தச் சட்டம் பயன் படுத்தப்படுகின்றது. நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராகப் போராடுபவர்களை ஒடுக்குவதற்கும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு அரசு தயாராகி வருகின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடாகும். இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் இதனையே வலியுறுத்துகின்றனர்.

எனவே, இது மக்கள் கோரிக்கையா கும். அதனை அரசு நிறைவேற்ற வேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் பெரும் ஆதரவு கிடைத்துள்ளது– என்றார்.

## வடக்கு மாகாண கூடைப்பந்தாட்ட கோப்பையை வழங்கினார் நாமல்!







கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வடக்கு மாகாண கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

சென்றலைஸ் மற்றும் கே.கே.எஸ் அணிகள் மோதிக் கொண்ட இறுதிச் சுற்றில் கே.கே. எஸ். அணி வெற்றிக் கோப்பையைத் தனதாக்கி கொண்டது. தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் இடத்தை சென்றலைஸ் மற்றும் வவு னியா அணிகள் பெற்றுக்கொண்டன.

இந்த இறுதிச் சுற்றின் வெற்றிக் கோப்பைகளை விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சருடன் பிரதமரின் வடக்கு கிழக்கு மீள்குடியேற்ற ஒருங்கிணைப்புச் செயலாளர் கீதனாத் காசிலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன், யாழ் மேலதிக மாவட்ட செயலாளர் முரளிதரன், போட்டி ஒருங்கணைப்புக் குழுத் தலைவர் சண்.தயாளன், ஆர்.எஸ்.மோட்டேர்ஸ் நிறுவன இயக்குநர் சுரேஸ்குமார், உலக நேவிகேட்டர்கள் இயக்குநர் சி.சந்துரு ஆகியோர் இணைந்திருந்தனர். அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கான நினைவுப் பரிசிலை சுரேஸ்குமார் மற்றும் சி.சந்துரு ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.



## வெடிபொருள்களை வீட்டில் வைத்திருந்த தம்பதி கைது

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலைப் பகுதியில் வீட்டில் வெடிபொருகள் வைத்திருந்த கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்படி வீட்டில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணவனும் மனைவியும் போரின் போது கைவிடப்பட்ட வெடிகுண்டுகளை உடைத்து வீட்டில் வைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இதன்போது வெட்டி எடுக்கப்பட்ட வெடிகுண்டுகளும், வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட குடும்பப் பெண் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவேளை அவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட குடும்பத் தலைவனைப் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் 72 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரணைக் குட்படுத்த நீதிமன்றின் அனுமதியைப் பொலிஸார் பெற்றுள்ளனர்.

### அரசுக்கு எதிராக ஹற்றனில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தற்போது அத்தியாவசிய பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதைச் சுட்டிக்காட்டியும், உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரியும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் பிற்பகல் 3 மணியளவில் ஹற்றன் நகர மணிக்கூட்டுகோபுரத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.இராதாகிருஷ்ணன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முக்கியஸ்தர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தொடர் மின் விநியோகத் துண்டிப்பு இடம்பெறுகின்றது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாள்தோறும் அதிகரிக்கின்றன. அதேவேளை, அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இவற்றின் காரணமாக மலையக மக்களும், இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய மக்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கருத்துத் தெரிவித்தனர்.

### மக்கள் ஆணை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் விசேட மாநாடு பதுளையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு அறிவிப்பு விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு :–

இந்த அரசு நாட்டைச் சீரழித்துள்ளது. தன்னால் முடியாது என்பதை செயல்கள் ஊடாக ஒப்புக்கொண்டுள்ளது. எனினும், உறுப்பினர்களை வளைத்துப் போட்டு, ஆட்சி மாற்றம் செய்யும் நடைமுறை எமக்குப் பொருந்தாது. ஜனநாயக வழியிலான மாற்றமே தேவை. அதற்கான வலியுறுத்தல் கொடுக்கப்படும்.

அதேவேளை, மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். அவர்களைக் கூலித்தொழிலாளர்களாக வைத்திருக்காமல், சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். லயன் யுகத்துக்கு முழுமையாக முடிவு கட்டப்படும். நிலையான வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படும் – என்றார்.

# பெண்ணால் நலன் அடையும் நாங்கள் பெண்களைக் காத்திடுதல் வேண்டும்!

**நாளை மகளிர் தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண், ஆஸ்திரேலியா**

மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டும். 'மண்மகிழப் பெண் பெண்மகிழ வேண்டும்'. பெண்ணைத் தெய்வம் என்கிறோம். மண்ணை பூமித் தாய் என்கிறோம். ஓடிவரும் நதிகளுக்கெல்லாம் பெண்ணின் பெயரையே சூட்டி நிற்கிறோம். பிறந்த நாட்டைத் தாய் நாடு என்கிறோம். பேசும் மொழியைத் தாய் மொழி என்கிறோம். பெண்ணின் பெயரைப் பெரிதும் மதித்து இவற்றை யெல்லாம் செய்கின்ற சமூகமானது பெண்மையை எப்படிப் பார்க்கிறது? அந்தப் பெண்மைக்கு எந்தளவு உயர்வினைக் கொடுக்கிறது? அந்தப் பெண்மையின் நிலைதான் என்ன? இவையெல்லாம் கேள்விகளாய் எழுந்து நிற்கின்றன.

உடல் அளவில் உறுதி மிக்கவனாக ஆண் விளங்கினாலும் மன வளவில் உறுதி மிக்கவளாகப் பெண்ணே விளங்குகிறாள். இதனால்தான் 'ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள்' என்று சொல்லப்படுகிறது. அவள் – தாயாக, தாரமாக, சகோதரமாக, மகளாக, தோழியாகக் கூட அமைந்து விடலாம். வீட்டின் அமைதியும், ஆனந்தமும் வெளியில் வியாபித்து சமூகத்தையே சாந்திக்கு ஆட்படுத்தும் ஆற்றல் நிச்சயம் பெண்மையின் கைகளிலேதான் தங்கியிருக்கிறது. அந்த அளவுக்கு பெண்மை என்பது வாழ்க்கையின் பெரு வெளிச்சம் எனலாம். அந்தப் பெரு வெளிச்சத்தை அளித்து நிற்கும் பெண்ணை பெண்மையைப் போற்றும் தினமாகத்தான் சர்வதேச மகளிர் தினம் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது எனலாம்.

பெண்களைப் பற்றிப் பெருமையாய் பேசும் சமூகத்தில் பெண்களின் ஆரம்ப கால நிலைமைகள் எப்படி அமைந்திருந்தன? பெண்களுக்கு இந்தச் சமூகம் குறிப்பாக ஆணினம் எந்தளவுக்கு சுதந்திரத்தை வழங்கி வந்திருக்கிறது? இவையெல்லாம் வரலாறாகி நீண்டு நிற்கிறது என்பதுதான் இதற்குப் பொருத்தமான விடை எனலாம்.

தடைகள் பலவற்றைத் தகர்த்தெறிந்து, தனித்துணிவுடன் களத்தில் இறங்கி, ஆணுக்குச் சமமான நிலை பெண்களுக்கும் உண்டு – பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்று போராடிய பெண்களின் போராட்டம் வெற்றியைத் தொட்ட நாளே பெண்கள் தினமாக இன்று உலகம் முழுவதும் பரவி நிற்கிறது எனலாம். இவ்வாறான தினம் கொண்டாட்டம் அல்ல! போராடிப் பெற்ற தினம் என்பதே மிகவும் பொருத்தம் உடையதெனலாம்.

பெண் நலம் ஓம்பப்படாத இடத்தில் வேறு எவ்வித நலனும் நிலவுவது அரிது. ஒரு நாட்டு நலன் அந்நாட்டுப் பெண்மக்கள் நிலைமையைப் பொறுத்தே நிற்கும் என்னும் திரு. வி. கவின் கூற்று யாவரும் மனமிருத்த வேண்டியதே.

நாளை சர்வதேச மகளிர் தினம் உலகெங்கும் வரவேற்புப் பெற்று பெண்களின் பெருமை விதந்து பேசப்படுகின்றதென்றால் அதற்கு வித்தாக விளங்கியவர் 18 ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியில் ஒரு கிராமத்தில் பிறந்த 'கிளாரா ஜெட்கின்' என்னும் பெண்மணியாவார். இவர் இளம் வயது முதலே பெண்களின் உரிமை, பெண்களின் நலன், யாவற்றிலும் மிகுந்த அக்கறை கொண்டவராகவே இருந்தார் எனலாம். பெண் தொழிலாளர்களின் உரிமையை, பிரச்சினைகளை, மனமிருத்தி – உலகெலாம் ஒலிக்கும்படி செய்தமையால் – பெண்களின் இயக்கங்களுக்கும், அவர்களின் செயற்பாடுகளுக்கும் பெரும் உந்துதலை அளித்தது எனலாம்.

பெண்கள் பற்றிய உரிமைப் போராட்டங்கள் என்னும் வகையில் 1789 இல் பாரீஸில் சமத்துவத்துவத்துக்காக பெண்கள் எழுந்தனர். பெண்கள் தொடர்பான வேலை நேரங்கள், பெண்களின் வாக்குரிமை, பெண் அடிமை, விடுதலை, என்னும் கோஷங்களுடன் பேரெழுச்சியாய் அப்போராட்டம் வெடித்தது. போராட்டத்தின் முடிவில் பெண்களின் கோரிக்கைக்கு பிரான்ஸ் அரசு ஒப்புதல் வழங்கியது. வழங்கிய அந்த நாள் மார்ச் 8 – 1848 ஆகும். இந்தத் திகதியும் மாதமும் மகளிர்க்கு உரிய தினம் என்னும் நிலைக்கு இட்டுச் செல்ல ஏதுவாக அமைந்தது எனலாம்.

பிரான்ஸில் பெண்களின் எழுச்சிபோல் 1857 இல் அமெரிக்காவில் நியூயோர்க்கிலும் பெண்களின் உரிமைக்குரல் எழுப்பப்பட்டது. பெண்கள் ஒருமித்துப் போராடினால்த் தான் அவர்களுக்கான உரிமைகள் கிடைக்கும் என்னும் எண்ணம் பரந்து விரிந்தது.

சர்வதேச மகளிர் தினத்துக்கு வித்திட்ட – கிளாரா ஜெட்கின் தலைமையில் 1919 இல் ஹேகனில் அனைத்துலகப் பெண்களுக்கான மாநாடு கூடியது. இம்மாநாட்டின் தொடர்பாக 'சர்வதேச மகளிர் அமைப்பு' என்பது உருவாக்கப்பட்டது. ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க்குடன் சில ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் பலர் இந்த அமைப்பின் சார்பில் 1911 இல் மார்ச்சு மாதம் 19 ஆம் திகதி முதல் 'சர்வதேச மகளிர் தினத்தைக்' கொண்டாடினார்கள். பெண்கள் பல நாடுகளிலிருந்து கலந்து கொண்ட இவ்வரலாற்று வேளையில்தான் – பெண்களுக்கான வாக்குரிமையினை அளிப்பதற்கு மன்னன் லூயிஸின் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இது இடம் பெற்றது மார்ச் மாதம் 8 ஆந் திகதியேயாகும். பெண்களின் ஒத்துழைப்பால் இவையனைத்தும் நிகழ்ந்த அந்த நாளை சர்வதேச மகளிர் தினமாக ஆண்டு தோறும் கொண்டாடும் தினமாகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.





1917 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி ரஷ்சியாவில் சென் பீட்டர்ஸ் நகரில் ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தை அடுத்து 1921 மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை 1975 ஆம் ஆண்டினை சர்வதேச மகளிர் ஆண்டாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து 1977 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சர்வதேச மகளிர் தினத்தை மகளிர் தினமாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டன. அதனால் துணிந்த பெண்கள் முழு வீச்சுடன் முனவந்து போராடிப் பெண்களுக்கான பல உரிமைகளை பெற்றெடுத்தார்கள். ஆனாலும் இன்னும்தான் பெண்களுக்கான பிரச்சினைகள் தொடர்ந்தபடியே தான் தொடர்கதையாய் தொடர்கின்றன எனலாம்.

மனித வாழ்விலே பெண்ணின் பங்கு மிக மிக இன்றியமையாதது எனலாம். இதனை எவருமே மறுத்துவிட முடியாது. ஆனால் அப்படிப்பட்ட பெண்களை பெண்கள் என்னும் தோற்றத்தையும் அவர்களது உடலையும் வைத்துக்கொண்டு அரங்கேறும் அவலங்கள் சொல்லமுடியாதன.

பெண்களுக்கு வாக்குரிமை எதற்கு? பெண்களுக்கு பேசும் உரிமை எதற்கு? பெண்களுக்கு வேலைபார்க்கும் உரிமை எதற்கு? பெண்களுக்கு வீட்டை விட்டு வெளியில் செல்லும் உரிமை எதற்கு? பெண்கள் என்றால் திருமணம் செய்ய உதவும் ஒரு மனித உருவம். பிள்ளைகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு இயந்திரம். ஆணுக்கு இன்பத்தை அளிக்கும் ஒரு நுகர்வுப் பொருள். இப்படியெல்லாம் எண்ணி பெண்ணினத்தை வதைத்த வரலாறு மறைக்க முடியாத வரலாறாகும். அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து போராடி பெண்கள் வந்து நிற்கும் நிலையினை இன்று உலகெங்கும் காணுகிறோம். ஆனாலும் பெண்களுக்கான அச்சம் என்னும் நிலை மட்டும் அகலவே இல்லை எனலாம்.

பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் பெற்று நிற்கிறார்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. நாட்டின் ஜனாதிபதியாக, பிரதம மந்திரியாக, உயர்நீதித் துறையின் தலைவராக, அரச பதவிகளில் உயர் நிலையில் இருப்பவர்களாக, தொழில் முனைபவர்களாக, பல்கலைக் கழக துணைவேந்தர்களாக, கல்லூரி முதல்வர்களாக, பத்திரிகைகளின் பிரதம ஆசியர்களாக இன்று உலகம் முழுவதும் பெண்கள் மிளிர்ந்து நிற்கிறார்கள் எனலாம். மருத்துவம், தொழில்நுட்பம், கலைகள், என்று பெண்களின் ஆளுமை பல்கிப் பெருகி நிற்பதையும் காணுகிறோம்.

ஆனாலும் பெண்கள் என்னும் படைப்பால் அவர்களை நோக்கும் விதமும், அவர்களை வதைக்கும் விதமும், சமூகத்தை விட்டு அகலவே இல்லை என்றே எண்ண முடிகிறது.

பெண்களைப் பொறுத்தவரை சட்டரீதியாகவும், சமூக ரீதியாகவும் எல்லோரையும் போல சமூகநீதி வழங்கப்படவேண்டும். ஆணும், பெண்ணும் சமமென்று பேசப்படுகிறதே தவிர அவர்களது நடைமுறை வாழ்வில் கிடைக்காது இருப்பதால் கிடைத்திடச் செய்திடல் அவசியமாகும். பெண்கள் பொருளாதார ரீதியாகவும், இன சமூகரீதியாகவும் பாதிக்கப்படும் நிலையினை மாற்றிட முயலுதல் அனைவரதும் தார்மீகக் கடமையாகும். பெண்களின் பிரச்சினைகளை அணுகவும், அவற்றை அகற்றிடவும் ஆற்றல் மிக்க அதிகாரிகள் நியமிக்கப்படுதல் அவசியமாகும். காவல்துறையில் கூட பெண்களின் நிலை பரிதாபமாகவே காணப்படுகிறது.

காவல் துறையில் உயர்பதவியில் இருக்கும் பெண்களுக்கே தக்க பாதுகாப்பு இல்லாதிருக்கிறது. மேலதிகாரிகளால் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகும் நிலை இன்றும் காணப்படுகிறது. அதுபோன்று ஏனைய உயர் பதவிகளில் இருக்கும் பெண்களுக்கும் – அவர்கள் பெண்கள் என்ற காரணத்தாலேயே அவர்களும் பல மன உளைச்சல்களுக்கு ஆளாவதும் – சிலர் மனமுடைந்து தற்கொலை முயற்சிக்கே சென்றுவிடுவதும் – ஏன், தற்கொலையே செய்துவிடுவதையும் காண முடிகிறது. இவை அனைத்துமே சமூகத்தைவிட்டுக் களையப்பட வேண்டியனவாகும்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக்குள்ளே
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர்சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே
அச்சமும் நாணமும்
நாய்களுக்கு வேண்டுமாம்
கற்பு நிலையென்றால்
இரு சாராருக்கும் பொதுவாக்குவோம்.

என்று முழக்கமிட்டுப் பெண்ணுரிமை பேசிநின்றான் புரட்சிக்கவி பாரதி. பாரதி வீர முழக்கத்தைப் படிப்பதோடு நின்றுவிடக் கூடாது. அதனைக் கருத்தில் இருத்தி யாவரும் செயலாக்குதலே மிகவும் அவசியமானதாகும். தாயாய், தமைக்கையாய், தங்கையாய், மனைவியாய், மகளாய், மருமகளாய், பேத்தியாய், வாழ்வில் இணைந்திருக்கும் பெண்ணை – பெண்மையினைக் காப்பது அனைவரதும் தலையாய பொறுப்பு அல்லவா?

பெண்ணால் நலன் அடையும் நாங்கள் பெண்களைக் காத்திடுதல் கட்டாயமான கடன் அன்றோ! பெண்ணைத் தூற்றுவதும், பெண்ணை இழிவு செய்வதும், பெண்ணை மனமுடையச் செய்வதும், பெண்ணை அடிமை என்று நினைப்பதும், பெண்ணைப் போகப்பொருள் என்றே எண்ணுவதும் பொருத்தமுடையதா! அனைவரும் சிந்திப்போம்! மகளிர் தினம் என்பது ஒரு நாளில் மேடை போட்டு சொற்பொழிவுகள் பொழிந்து நிற்பதல்ல! வாழ்வின் துணையாக, இணையாக இலங்கிடும் பெண்ணை, பெண்மையைக் காப்பதுதான் நம் அனைவரதும் தலையாய கடமையாகும்.

அவர்களுடைய உரிமைகள் பேணப்பட வேண்டும். ஏனெனில் உலகெங்கும் சிறந்த பெண்களே உள்ளனர். ஆனால் அவர்களுக்கான அழகான வாழ்க்கை கிடைத்திருக்கிறதா என்பதே கேள்வியாகி நிற்கிறது எனலாம்!

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் எரிபொருள் நெருக்கடி இல்லை பொய்யான செய்திகள் பரவுகின்றனவாம்!

## பிரதமர் மஹிந்த கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 07

எரிபொருள் நெருக்கடி என்ற தவறான கருத்து காரணமாகவே மக்கள் அச்சத்தில் உள்ளனர் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எரிபொருள் இருப்பு நான்கு நாள்களுக்கு மட்டுமே இருக்கின்றது எனத் தவறான செய்திகள் பரவுகின்றன எனத் தெரிவித்த அவர், நாட்டில் எவ்வித எரிபொருள் நெருக்கடியும் இல்லை எனக் கூறினார்.

அரசியலில் குறைந்த அனுபவம் கொண்டவர்களால் வெளியிடப்படும் இவ்வாறான அறிக்கைகள் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளன எனத் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான செய்திகள் காரணமாக நாடு முழுவதும் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளார் என பிரதமர் கூறினார்.

அதற்காக அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி அனைத்து அரச ஊழியர்களும் உழைக்க வேண்டும் எனப் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

## 100 கோடி அமெரிக்க டொலர் கடன் கடும் நிபந்தனையை விதித்தது இந்தியா!

இலங்கை அரசாங்கம் கோரிய 100 கோடி அமெரிக்க டொலர் கடனுக்கு இந்தியா கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளதாக அறிய முடிகின்றது.

அந்நியச் செலாவணி மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் நெருக்கடியிலிருந்து நீண்டகால மீட்சியை இலக்காகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிக்க இந்தியா கோரியுள்ளது.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கில் பொருளாதாரத் திட்டங்களைத் தொடங்குவதற்கான முன்னேற்பாட்டு பட்டியலையும் இந்தியா கோரியுள்ளதாக அறிய முடிகின்றது.

கடந்த வருடம் டிசெம்பரில் 50 கோடி அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக் கொண்ட நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய விஜயம் இரண்டு முறை இரத்து செய்யப்பட்டது.

இதன் காரணமாக உணவு, எரிபொருள், மருந்துப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்கான மேலும் 100 கோடி டொலர் கடனைப் பெறுவதற்கு இன்னும் திட்டம் வகுக்கப்படவில்லை.

இலங்கை எடுத்த டிசெம்பர் மாதக் கடனும் இந்த வாரத்தில் செலுத்தப்படஇருந்த நிலையில், பலாலி விமான நிலையத்தை மீண்டும் திறப்பது, திருகோணமலை துறைமுக பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை இந்தியா முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு எமது அரசில் சுகபோக வாழ்வு!

## சஜித் பிரேமதாஸ உறுதி



ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு சுகபோக வாழ்க்கையை வழங்குவதாக சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தோட்டத் தொழிலாளர்கள் பல அநீதிகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும், வாக்குறுதி வாங்கியபடி இன்று வரை 1,000 ரூபா நாளாந்த சம்பளம் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

எனவே ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு என்றென்றும் கட்டுப்பட மாட்டார்கள் என பிரேமதாஸ கூறினார்.

சிறிய தோட்ட உரிமையாளர்களுக்கு காணி உரிமையை வழங்குவதாக சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார்.

மேலும் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் சிறிய தேயிலை தோட்டங்களில் தோட்டத்தொழிலாளர்களை பங்குதாரர்களாக மாற்றுவேன் என்றும் உறுதியளித்தார்.

## இலங்கைக்கு கடத்த முயன்ற ஏலக்காய் மூடைகள் பறிமுதல்!

இந்தியாவின் தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 10 லட்சம் மதிப்புள்ள ஏலக்காய் மூடைகளை கடந்த சனிக்கிழமை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தூத்துக்குடியில் இருந்து இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு போதைப் பொருள்கள் கடத்தலை தடுக்க கியூ பிரான்ச் பொலிஸார் மாவட்டம் முழுவதும் கடற்கரையில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று மாலை கடற்கரையில் ரோந்து பணியில் ஈடுபட்ட கியூ பிரான்ச் பொலிஸார் 2 படகுகளில் சோதனையிட்ட போது மொத்தம் 14 மூடைகளில் 550 கிலோ ஏலக்காய் இருப்பதை கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

இதன் மதிப்பு 10 லட்சம் என்று கூறப்படுகிறதோடு, மர்மநபர்கள் இலங்கைக்கு கடத்த முயன்றமையும் தெரியவந்துள்ளது. மேலும் அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.

## பதவி நீக்கப்பட்ட அமைச்சர்களுக்கு அதே பாதுகாப்பு வழங்க ஏற்பாடு!

அண்மையில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பிலவுக்கு அமைச்சரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு வழங்கப்பட உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கான பாதுகாப்பு வழங்கிய அதிகாரிகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவிருந்தது.

இந்நிலைமையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் விமல் மற்றும் கம்மன்பில ஆகியோர் அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்திருந்ததோடு அவர்களின் பாதுகாப்பைக் குறைக்க வேண்டாம் எனவும் அமைச்சர்களுக்காக பாதுகாப்பைத் தொடர்ந்து வழங்குமாறும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

அதாவது நாடாளுமன்ற உறுப்பினருக்குப் பொதுவாக இரண்டு மெய்க்காப்பாளர்கள் மட்டுமே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் தட்டுப்பாடு விரைவாக தீர்க்கப்படும்!

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு



அரசியல் இலாபத்துக்காக வெளியில் பேசுவதால் ஏற்படும் பிரச்சினை அரசியல் ரீதியில் எமக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

எரிபொருள் விலையேற்றம் என்பது எல்லா நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெயின் விலையேற்றம் காரணமாக ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் அதனை தவிர்த்துக் கொள்ள முடியாது.

எரிபொருள் தட்டுப்பாடு விரைவாக தீர்க்கப்படும். கப்பல்கள் வந்திருக்கின்றன. எரிபொருள் இறக்கப்படுகிறது. வழமை போன்று எரிபொருள் விநியோகம் விரைவில் நடக்கும். மேலும், ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்ற தேர்தலிலும் ஒரு குடும்பமாக இருந்து எடுத்த முயற்சிகள் தான் எமக்கு பாரிய வெற்றிகளைத் தந்தன.

குடும்பத்துக்குள் ஏற்படும் பிரச்சினைகளை அங்கேயே பேசித் தீர்க்க வேண்டுமே தவிர, அதை வெளியில் சொல்லும் போது பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

மேற்படி குழுக் கூட்டம், கட்சி தலைவர் கூட்டம் என இருந்தும் அதில் பேசாமல் அரசியல் இலாபத்துக்காக வெளியில் பேசுவதால் ஏற்படும் பிரச்சினையால் ஏற்படும் பாதிப்புக்கள் அரசியல் ரீதியில் எமக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது எனத் தெரிவித்துள்ளார்.

## மழலைகளுக்கான மாலைநேர பாடசாலை வவுனியா தரணிக்குளத்தில் ஆரம்பமானது

வவுனியா, தரணிக்குளத்தில் மழலைகளிற்கான மாலை நேர பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவனியா தரணிக்குளம் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் முகமாக மழலைகளுக்கான மாலை நேர பாடசாலையை நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கஜேந்திரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும் மழலைகளுக்கான மாலை நேரபாடசாலை தரணிக்குளம் அறநெறிப் பாடசாலை மண்டபத்திலேயே இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இ.போ.ச. டிப்போக்களில் டீசல்பெற தனியார் பஸ்களுக்கு அனுமதியளிப்பு

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்களில் இருந்து தேவையான டீசலை பெற்றுக்கொள்ள தனியார் பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதிலும் உள்ள 45 இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த டிப்போக்களுக்கு ஏற்கனவே போதுமான டீசல் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நாடு முழுவதும் உள்ள மீதமுள்ள டிப்போக்களுக்கும் அதிக எரிபொருள் வழங்கப்படும் என தான் நம்புகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சுற்றுலாத்துறையில் ஈடுபடும் பஸ்களுக்கு போதியளவு டீசலை வழங்குவதற்கு அமைச்சு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.03.2022இல் வெளியிடப்பெற்றது.